[14th July 1962

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes Sir.

(*b*) For further extension of electric supply, a loan of Rs. 9,97,860 was disbursed to this licensee during 1960–61. During 1961–62 another loan of Rs. 15,24,634 was disbursed to this licensee for rural electrification. The question of granting a further loan to this licensee during 1962–63 is also under consideration. Apart from granting loans to the licensees for developing the underdeveloped area in their areas, the Government have also issued a direction to the Madras State Electricity Board that the policy to be followed by the Electricity Board should be that it should operate in the undeveloped areas within the areas of supply of the licensees with a view to the rational development of electricity in those areas.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சார், இந்த லைசென்சி பகுதிகளில் மின்சாரம் சரியாக விஸ்தரிக்கப்படவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் லோன் குறைவாக இருக்கும் காரணத்தால், இந்தக் கம்பெனிகளை எடுத்துக்கொள்கிற சட்டங்களின் கீழ் எடுத்துக்கொண்டு மெட்ராஸ் ஸ்டேட் எலக்ட்ரிசிடி போர்டு மூலமாக அதிகமான அளவுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்க அரசாங்கம் உடனடியாக முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவ்வாறு எலக்ட்ரிசிடி " அண்டர் டேகிங்ஸை " எல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னால் ஏறக்குறைய 10 கோடி ரூபாய் அளவுக்கு மூலதனம் வேண்டும். அந்தப் பத்து கோடி ரூபாயைச் செலவழித்து இன்னும் எலக்ட்ரிசிடியை விஸ்தரிப்பதா, அல்லது லைசென்சி வைத்திருக்கும் இடங்களை எடுத்துக் கொள்வதா என்பது கொள்கை பூர்வமாக முடிவு செய்யவேண்டியதாகும். ராஜ்ய சர்க்காரைப் பொறுத்தவரை அவர்களுக்கு லோன் கொடுத்து விஸ்தரிப்பதுதான் நல்லது, பத்து கோடி ரூபாய் வரை அவர்களுக்குக் " காம்பன்சேஷன் " கொடுத்துவிட்டு எடுத்துக் கொள்வது நல்லதல்ல என்று நினைக்கிறோம்.

கிராமங்களுக்கு மின்சார வசதி

* 289 கேள்வி.—**திரு. எஸ். மாதவன் :** (**திரு. கோ. சி. மணி** அவர்கள் சார்பாக) : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆடுதுறை தொகுதியில் (i) மின்சார வசதி உள்ள கிராமங்கள், (ii) வசதி இல்லாத கிராமங்கள் எத்தனை? அங்கு வசதி செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (i) Number of villages electrified in the Aduthurai Constituency—55.

(ii) Number of villages not electrified—51.

Out of 51 villages which have not been electrified so far, action is being taken to electrify 14 villages.

* 290 கேள்வி.—**திரு. எஸ். மணி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் பெரம்பலூர் தாலூகாவில் எத்தனை கிராமங்களுக்கு மின்சார வசதி செய்யப்பட்டிருக்கிறது ?

(இ) மேற்கொண்டு எத்தனை கிராமங்களுக்கு வசதி செய்து கொடுக்க உத்தேசம் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Seven villages.

(*b*) Ten more villages during 1962.

14th July 1962]

திரு. எஸ். மணி : மூன்றாவது திட்ட காலத்திலே மின்சாரம் இல்லாத கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எலக்ட்ரிசிடி போர்டுடைய எல்லைக்குட்பட்டிருக்கும் எல்லாக் கிராமங்களுக்கும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிச்சயமாக மின்சார வசதி செய்து கொடுக்கப்படும். லைசென்சி இருக்கும் பகுதிகள் பற்றி அவ்வளவு திடமாகக் கூற முடியாது. அவர்களுக்கும் லோன் கொடுத்து அந்தப் பகுதிகளுக்கும் மூன்றாவது திட்ட காலத்திற்குள் மின்சார வசதியைச் செய்து கொடுக்கவேண்டுமென்பது சர்க்காருடைய திட்டம்.

திரு. எம். தண்டாயுதபாணி : பட்டுக்கோட்டை தாலூகாவில் ஒரு பகுதியைச் சர்க்காரே எடுத்துக்கொண்டு மற்றொரு பகுதியை எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறது. அதையும் எடுத்துக்கொள்ள சர்க்கார் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கனம் அங்கத்தினர் கடிதம் எழுதி அதற்குக் காரணங்கள் காட்டினால் சர்க்கார் பரிசீலனை செய்யும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : பெரம்பலூர் தாலூகா இப்போது சேஷசாயி பிரதர்ஸ் லைசன்சி ஏரியாவில் இருக்கிறது. அதனால் மின்சாரத்தை விஸ்தரிப்பது கடினமாக இருக்கிறது. போதுமான திட்டம் இதுவரை எடுத்துக்கொள்ளப்படவில்லை. அவர்களுடைய பிரதேசம் எல்லை ஓரத்தில் இருக்கும் காரணத்தால், இதை அரசாங்கமே எடுத்துக் கொண்டு மின்சார விஸ்தரிப்புக்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சௌத் மெட்ராஸ் கார்ப்பரேஷனைப் பொறுத்த அளவில் சர்க்காருக்கு எந்தெந்தப் பகுதிகளை அவர்கள் " ரிலீஸ் " செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்களோ ஓரளவு அவர்கள் அதைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் சொல்லும் பகுதிகளைப் பற்றிக் குறிப்பாக எழுதி அனுப்பினால் ராஜ்ய சர்க்கார் கவனம் செலுத்தும்.

திரு. து. ப. அழகமுத்து : சர்க்கார் மின்சார சப்ளை ஒட்டியிருக்கும் தென் மதராஸ் எலக்ட்ரிசிடி கார்ப்பொரேஷன் ஏரியாக்களையும் சர்க்காரே ஏற்றுக் கொண்டு மின்சாரத்தை விஸ்தரிக்க முன் வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் கனம் கலியாணசுந்தரம் அவர்களும் கேட்டார்கள். எந்தப் பகுதியைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று குறிப்புகள் எழுதி அனுப்பினால், " கண்டிஷவஸ் " ஆக இருக்கிறதா என்று பார்த்து சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

திரு. பி. முருகையன் : கரம்பக்காடு பஞ்சாயத்து யூனியன் ஏரியாவில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாக மின்சார விளக்குகள் எல்லாம் போடப்பட்டும் இன்னும் 4, 5 தெருக்களுக்கு மின்சாரம் கொடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கெல்லாம் தனித்தனியாக மனுப் போடவேண்டும்.

திரு. முனு ஆதி : கிராமப் பஞ்சாயத்து ஏரியாக்களில் இன்றைக்குக் கூட தனிப்பட்டவர்களோடு மின்சார ஒப்பந்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. என்னுடைய குறைபாடு என்னவென்றால் கிராமப்புறங்களுக்கு மின்சார வசதி கிடைக்க முடியாத காரணத்தால் அரசியலாரே தனியாகப் பணம் ஒதுக்கி பின்தங்கிய கிராமப் பகுதிகளில் மின்சாரம் விஸ்தரிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : போர்டு எல்லைக்குள் இருந்தால் அதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். லைசென்சி எல்லைக்குள் இருந்தால் அவர்களுக்குக் கடன் கொடுத்து அதைச் செய்யச் சொல்லும்.